செ.வெ.எண் : 07 நாள் : 03.06.2017

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கான விண்ணப்பங்கள்

## செய்தி குறிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2014-2015 ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் விதி எண். 110- ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு, 2015 ஆம்ஆண்டு முதல் முதலமைச்சர் மாநில இளைஞர் விருது ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 முதல் 35 வயது வரை உள்ள மூன்று ஆண்கள் மற்றும் மூன்று பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ரூ.50000/- ம் ரொக்கம் பராட்டுப்பத்திரம் மற்றும் பதக்கம் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும். இதன்படி 2017 ம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது எதிர்வரும் 15.08.2017 அன்று நடைபெறும் சுதந்திர தின விழவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட உள்ளது. இவ்விருதுகள் பெறுவதற்கான தகுதிகள் 15 வயது முதல் 35 வரையுள்ள ஆண்/பெண் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். கடந்த 01.04.2016 அன்று 15 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். மற்றும் 31.3.2017 அன்று முப்பத்தி ஐந்து வயதுகுள்ளாக இருத்தல் வேண்டும்.கடந்த நிதியாண்டில் (2016-2017) மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டுமே பரிசீலிக்கப்படும். விருதிற்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்த பட்சம் ஐந்து வருடங்கள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருத்தல் வேண்டும். அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரார்கள் சமூதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்த தொண்டு, கண்டறியப்படக் கூடியதாகவும், அளவிடக் கூடியதாகவும், இருத்தல் வேண்டும். மத்திய /மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள்,

பல்கலைக்கழகங்கள்/ கல்லூரிகள்/ பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது. விண்ணப்பதாரருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்கு விருதிற்கான பரிசீலனையில் கணக்கிற் கொள்ளப்படும்.

மேற்கண்ட விருதிற்கு விண்ணப்பப் படிவம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இளையதளம் முகவரி **www.sdat.tn.gov.in-** லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்கள் 15.06.2017 மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பதாரர் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

கரூர்.